**Starting time 11.30 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 244/2012**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 06.09.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling: | | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:** தாவா சொத்து ஆரம்பத்தில் பெருமாள் ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. பெருமாள் ரெட்டியாருக்கு மூன்று மகன்கள் ராமன், லட்சுமணன் மற்றும் ராஜீ என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எனக்கு அவர்களை நன்றாக தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக தெரியாது என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. இநத வழக்கு சொத்தையும் அசல் வழக்கு 243/2012 -ன் சொத்தையும் ராமன், லட்சுமணன் மற்றும் ராஜீ ஆகிய மூவரும் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால், தெரியாது.

2. நான் தாவா சொத்தை நான் யாரிடம் வாங்கினேன் என்றால், என் தகப்பனார் மூலமாக எனகது வந்தது. என் தகப்பனார் சித்தேஸ் (எ) சித்தேஸ்வரன் என்பவரிடமிருந்து தாவா சொத்து வாங்கினார். சித்தேஸ்வரனுக்கு இந்த சொத்து எவ்வாறு வந்தது என்றால், அவர் அன்பழகன், அறிவழகன் என்பவரிடமிருந்து வாங்கினார். அன்பழகன் மற்றும் அறிவழகனுக்கு சொத்து எவ்வாறு வந்தது என்றால், அவர்களது பாட்டி வீரம்மாள என்பவரது மூலமாக வந்தது என்று கேள்வி பட்டேன். அன்பழகன் மற்றும் அறிவழகன் பெயரில் தாவா சொத்து சம்மந்தமாக ராமனின் மகள் அ.வ.151/1992 வழக்கை தாக்கல் செய்து குறித்து எனக்கு தெரியுமா என்றால்,

தெரியாது. அந்த வழக்கு ராமன் மகள் அலமேலு ஆதரவாக தீர்பபாகியது பற்றிதெரியுமா என்றால், எனக்கு தெரியாது. மேல்முறையீட்டு வழக்கு எண். 47/1997-ல் அன்பழகன் மற்றம் அறிவழகன் மேல்முறையீடு செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. அ.வ. எண். 151/1992 தீர்ப்பானது குறித்தும அதற்கு எதிராக மேல்முறையீட்டு வழக்கு எண். 47/1997-ல் தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி குறித்து நன்கு தெரியும் என்றால், சரியல்ல. அ.வ. எண். 151/1992-ல் அலமேலு அன்பழகன் அறிவழகன் மற்றும் வீரம்மாள் ஆகியோருக்கு அந்த பாத்தியப்பட்டது அல்ல என்று தீர்ப்பானது பற்றி எனக்கு தெரியுமா என்றால், அது பற்றி தெரியாது. அனைத்து விவரமும் தெரிந்துகொண்டுதான் அலமேலு என்பவரிடம் சொத்து அபகரிக்க வேண்டி என்றால், சரியல்ல. அலமேலுவை செங்கம் தாலுக்கா மேல் ராவந்தவாடி ஊரில் திருமணம் செய்துக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால், தெரியாது. வீரம்மாள் அன்பழகன் மற்றும் அறிவழகனுக்கு எழுதிக்கொடுத்த ஆவணமே செல்லாது என்றுதான் செல்லாது என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 11.40 A.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**